# இல்லம்
## செய்தி மடல்

VOLUME ISSUE 2008/2 APRIL - JUNE 2008


## கிழக்கு மாகாணத்தில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் செயல்பாடுகளும் எதிர்கால நடவடிக்கைகளும்

கிழக்கு மாகாணம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். மொத்த பரப்பளவாக 9,792 சதுரக் கிலோ மீற்றராகவும், 2005ம் ஆண்டு மதிப்பீட்டின்படி 1,616,415 சனத் தொகையையும் கொண்ட மாகாணமாகவும் உள்ளது. இம் மூன்று மாவட்டங்களிலும் முறையே 166,884, 115,894, 101,743 குடும்பங்களாக மொத்தம் 384,521 குடும்பங்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த இருபது வருடங்களாக நடைபெற்ற இன வன் முறை காரணமாகவும் 2004 டிசம்பர் 26 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் காரணமாகவும் இம் மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், இப் பாதிப்பு இம் மாகாண மக்களது வாழ்க்கைத் தரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ் இரு அனர்த்தங்களினாலும் பாதிப்படைந்த தனியார் வீடுகளில் யுத்த அனர்த்தத்தால் பாதிப்படைந்த வீடுகளில் ஒரு பகுதியை மீள்நிர்மாணம் செய்யும் பணிக்கான நிதியுதவியை வழங்குவதற்கு உலக வங்கி இலங்கைக்கு உதவி புரிய முன்வந்தது. இதற்காக முதலாம் கட்டமாக உலக வங்கி 75 மில்லியன் டொலர்களை கடனாக இலங்கைக்கு வழங்கியது. இதற்கான பரஸ்பர ஒப்பந்தம் 15.02.2005இல் கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தப்படி, வீடுகள் அழிவடைந்த மீள குடியமர்ந்த, மாத வருமானம் ரூபா 2,500.00க்கு குறைந்த குடும்பங்களுள் நலிவடைந்த குடும்பங்களுக்கு, அரச, திட்ட நிதி உதவியாக ரூபா.250,000.00 வழங்கி, அந்த நிதியைக் கொண்டு 500 சதுர அடிக்கு குறையாத பரப்பளவைக் கொண்ட நிரந்தர வீடொன்றை பயனாளிகளைக் கொண்டே கட்டுவதற்கு, இலங்கையரசாங்கத்துக்கும், உலக வங்கிக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டது.

2003ம் ஆண்டு செய்யப்பட்ட வீட்டழிவு சேத மதிப்பீட்டின்படி மொத்தமாக எட்டு மாவட்டங்களிலும் 290,615 வீடுகள் அழிவடைந்து மீளக் கட்டப்படாத நிலையில் இருந்ததாக மதிப்பிடப்பட்டிருந்தது. அத்தோடு உலக வங்கியின் நிதி உதவி 31,270 வீடுகளை மாத்திரம் மீள் நிர்மாணம் செய்வதற்குப் போதுமானதாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது. இதன்படி மொத்தமாக சேதமடைந்த வீடுகளில் 10.7% குடும்பங்களுக்கு மாத்திரம் இத் திட்ட உதவி கிடைக்கக் கூடியதாகவிருந்ததால், பாதிப்படைந்த குடும்பங்களில் மிகவும் நலிவடைந்த குடும்பங்களை இனம் கண்டு அவர்கள் மூலம், இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி மாவட்ட ரீதியான அழிவுற்ற வீடுகளும் அம் மாவட்டங்களில் மீள் நிர்மாணம் செய்ய உத்தேசிக்கப்பட்ட வீடுகளது தொகையும் அட்டவணை I இல் தரப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் செயற்பாடுகள் 2005ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பொழுதும், அதன் முன்னோடியாக 2004ம் ஆண்டில் 08 மாவட்டங்களிலும் தலா 100 – 125 வீடுகளாக மொத்தம் 860 வீடுகள் கட்டப்பட்டன. இவற்றுக்கான திட்ட நிதி உதவியாக ரூபா 150,000.00 தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. பின்னர் 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி பேரழிவு காரணமாக, இலங்கையின் கடலோர மாவட்டங்களில் ஏற்பட்ட குடியிருப்பு வீடுகளின் பேரழிவை ஈடுசெய்வதற்கு வீட்டழிவு உதவி மானியம் தலா ரூபா 250,000.00ஆக அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் இத் திட்ட நிதி நன்கொடைத் தொகையும் ரூபா.250,000.00 ஆக அதிகரிக்கப்பட்டது.

**மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டிய வீடுகளும் உலக வங்கி நிதி உதவியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளும்**

அட்டவணை - I

| மாவட்டம் | அழிவடைந்த வீடுகள் | திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட வீடுகள் | % |
|---|---|---|---|
| அம்பாறை | 11,342 | 1,137 | 3.6 |
| மட்டக்களப்பு | 57,943 | 5,816 | 18.6 |
| திருகோணமலை | 38,310 | 3,845 | 12.3 |
| மன்னார் | 20,082 | 2,016 | 6.4 |
| வவுனியா | 7,640 | 767 | 2.5 |
| முல்லைத்தீவு | 22,871 | 2,296 | 7.3 |
| கிளிநொச்சி | 27,363 | 2,747 | 8.8 |
| யாழ்ப்பாணம் | 105,064 | 10,546 | 33.7 |
| உயர் பாதுகாப்பு வலயம் | - | 2,100 | 6.8 |
| மொத்தம் | 290,615 | 31,270 | 100 |

தொடர்ச்சி 2ம் பக்கம்......

**1ம் பக்க தொடர்ச்சி..........**

இதன்படி திட்ட நடவடிக்கைகள் 08 மாவட்டங்களில் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. திட்டத்தின் முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு, ஐரோப்பிய யூனியன் உலக வங்கி மூலம் இத் திட்ட நடவடிக் கைக்குள் தாமும் இணைந்து கொண்டது. அதன் முதற்படியாக 2006ம் ஆண்டு 6 மில்லியன் யூரோக்களை திட்டத்திற்கு உதவி நன்கொடை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கத்தோடு கைச்சாத்திட்டது. இம் மேலதிக நிதி கிடைத்ததாலும் உயர் பாதுகாப்பு வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட 2,100 வீடுகளின் ஒரு பகுதி உயர் பாதுகாப்பு வலயம் இரத்துச் செய்வதற்கான சாத்தியங்கள் அருகிப் போன காரணத்தாலும், மாவட்டங்களுக்கிடையிலான வீட்டு உதவி ஒதுக்கீடு, உலக வங்கியினால் மீளாய்வு செய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்ட ங்களின் அழிவுத் தன்மை அதிகமாகக் காணப்பட்டதால் அழிவு விகிதாசாரத்திற்கு மேலதிகமான வீடுகள் இம் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளது.

### மீள் ஒதுக்கப்பட்ட திட்ட வீடுகள்

**அட்டவணை - II**

| மாவட்டம் | அழிவடைந்த வீடுகள் | திட்டத்தில் உலக வங்கி நிதி மூலம் ஒதுக்கப்பட்ட வீடுகள் (உயர் பாதுகாப்பு வலயம்) | திட்டத்தில் ஐரோப்பிய ஒன்றிய நிதி மூலம் ஒதுக்கப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|
| அம்பாறை | 11,342 | 340 | 2,469 | 2,809 |
| மட்டக்களப்பு | 57,943 | 7,135 | 516 | 7,651 |
| திருகோணமலை | 38,310 | 3,735 | 238 | 3,973 |
| மன்னார் | 20,082 | 2,222 | 32 | 2,254 |
| வவுனியா | 7,640 | 1,461 | 34 | 1,495 |
| முல்லைத்தீவு | 22,871 | 2,313 | - | 2,313 |
| கிளிநொச்சி | 27,363 | 3,031 | - | 3,031 |
| யாழ்ப்பாணம் | 105,064 | 11,033 | 225 | 11,258 |
| தொகை | **290,615** | **31,270** | **3,514** | **34,784** |
| | * உயர் பாதுகாப்பு வலய வீடுகள் மீளமைப்பு - யாழ்ப்பாணம் | | | |
| | * புத்தளம் மீள் குடியேற்றம் - மன்னார் - 184 | | | |

ஐரோப்பிய ஒன்றியத்தின் மேலதிக நிதியான 06 மில்லியன் யூரோ நிதியைக் கொண்டு 5,000 வீடுகளும், உயர் பாதுகாப்பு வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட 2,100 வீடுகளில் இதுவரை கட்டிமுடிக்கப்பட்ட 615 வீடுகளை தவிர்த்து மீதியாக இருந்த 1,485 வீடுகளுமாக மொத்தம் 6,485 வீடுகள் மொத்தமான 08 மாவட்டங்களிடையேயும் மீளப் பகிரப்பட்டன. இவ்வாறு பகிரப்படும் பொழுது அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் யுத்தத்தால் நலிவடைந்த குடும்பங்களது வீதம் அதிகமாகக் காணப்பட்டதால் அம் மாவட்டங்களுக்கான வீட்டு ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொள்ளக் கூடியதாகும்.

ஒதுக்கப்பட்ட வீடுகளில் மாவட்ட வாரியாக 31.03.2008 வரை மீள் நிர்மாணம் செய்யப்பட்ட முன்னேற்றத்தை நோக்குமிடத்து கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களும், வவுனியா மாவட்டமும், ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு மேலதிகமான வீடுகளைப் பொறுப்பேற்று தற்போதைய நிலைமையில் திட்ட முடிவு காலமாகிய (30.06.2009க்கு) ஒரு வருடத்திற்கு முன்னரே (30.06.2008) முடிவடையக் கூடிய நிலைமையை கள முன்னேற்ற அடிப்படையிலும், நிதிச் செலவின் அடிப்படையிலும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதனை அட்டவணை III ன் மூலமும் அட்டவணை IV இன் மூலமும் அவதானிக்கலாம்.

### 30.03.2008 வரையிலான திட்ட முன்னேற்றம்

**அட்டவணை - III**

| மாவட்டம் | ஒதுக்கப்பட்ட வீடுகள் | கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் | செய்யப்பட்டு கொண்டிருக்கும் வீடுகள் | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 11,258 | 3,359 | 4,705 | 8,064 | 71.6 |
| கிளிநொச்சி | 3,031 | 611 | - | 611 | 20.0 |
| முல்லைத்தீவு | 2,313 | 613 | - | 613 | 26.5 |
| வவுனியா | 1,495 | 1,348 | 300 | 1,648 | 110.0 |
| மன்னார் | 2,254 | 912 | 857 | 1,769 | 78.4 |
| திருகோணமலை | 3,973 | 3,809 | 1,064 | 4,873 | 122.6 |
| மட்டக்களப்பு | 7,651 | 2,652 | 5,150 | 7,802 | 101.9 |
| அம்பாறை | 2,809 | 1,382 | 2,416 | 3,798 | 135.0 |
| | **34,784** | **14,686** | **14,492** | **29,178** | **83.8** |

31.03.2008இல் செய்யப்பட்டு கொண்டிருக்கும் 14,492 வீடுகளில் 12,000 வீடுகள் 30.06.08க்கு முன்னர் முடிவடையவுள்ளது. மீதியானவை 31.12.08க்கு முன்பு கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் கட்டிட வேலைகள் தொடங்கப்படாத மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் கட்டிடப் பொருட்களைக் கொண்டு செல்வதில் தற்பொழுதுள்ள தடை காரணமாக திட்ட செயற்பாட்டு நடைமுறைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அம் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, உலக வங்கியின் ஆலோசனைப்படி விசேட ஒதுக்காக வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட ங்களுக்கும் கட்டிடப் பொருட்களைக் கொண்டு செல்வதில் காணப்படும் தாமதம் காரணமாக திட்ட செயற்பாடுகளில் மந்த நிலை காணப்படுகின்றது. எனினும் திட்ட முடிவு காலத்திற்கு முன்னர் (30.06.2009) அவற்றை செய்து முடிப்பதற்கு முன்னேற்பாடுகளை திட்டப் பணிமனை சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர்களுடன் சேர்ந்து எடுத்து வருகின்றது.

### திட்டத்தில் ஒதுக்கப்பட்ட வீடுகளும் மீள் நிர்மாணம் செய்யப்படும் தொகையும்

**அட்டவணை - IV**

| மாவட்டம் | திட்ட ஒதுக்கீடு | மேலதிகமாக செய்யப்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|
| அம்பாறை | 2,809 | 989 | 3,798 |
| மட்டக்களப்பு | 7,651 | 151 | 7,802 |
| திருகோணமலை | 3,973 | 900 | 4,873 |
| மன்னார் | 2,254 | - | 2,254 |
| வவுனியா | 1,495 | 153 | 1,648 |
| முல்லைத்தீவு | 2,313 | - | 2,313 |
| கிளிநொச்சி | 3,031 | - | 3,031 |
| யாழ்ப்பாணம் | 11,258 | - | 11,258 |
| | **34,784** | **2,193** | **36,977** |

இதன்படி கிழக்கு மாகாணத்தில் உள்ளடக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அவற்றுக்கு ஒதுக்கப்பட்ட 14,433 வீடுகளுக்கு மேலதிகமாக 2,100 வீடுகளை இத் திட்டம் ஒதுக்கியுள்ளதுடன் அவை 30.06.08க்குள் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இவை பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு கிடைத்ததோர் வரப்பிரசாதமாகும்.

அதற்கு மேலதிகமாக திட்டப் பணிமனை, அரசாங்கம் மூலம் எடுத்த நடவடிக்கை காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் மேலதிக நிதியாக 10 மில்லியன் யூரோவை இத் திட்டத்திற்கு வழங்க அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

தொடர்ச்சி 3ம் பக்கம்......

**2ம் பக்க தொடர்ச்சி..........**

அம் மேலதிக நிதியைக் கொண்டு மேலதிகமாக 5,000 வீடுகளை 08 மாவட்டங்களிலும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந் நிதி மூலம் கிழக்கு மாகாணம் 2,075 வீடுகளைப் பெறவுள்ளது. இவை முறையே 571, 1,100, 404 என்ற வீதத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றை செயற்படுத்தும் நடவடிக்கை இவ் வருடம் ஜுலை மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் முன்னேற்றத்தையும், வடக்கு கிழக்கில் மேலதிகமாக கட்டப்பட வேண்டிய வீடுகளினதும் தொகையையும் பாதிப்படைந்த குடும்பங்களது சமூக பொருளாதார நிலையையும் கவனத்தில் எடுத்து, இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையையும் கவனத்தில் எடுத்து உலக வங்கி 43 மில்லியன் அமெரிக்க டொலர்களை மேலதிக உதவியாக வழங்க உள்ளது. இதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இம் மேலதிக நிதி 2006ம், 2007ம் ஆண்டு ஏற்பட்ட வீடழிவுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசம் (6 பிரதேச செயலர் பிரிவுகள்) வாகரை பிரதேச செயலகப் பிரிவு என்பனவும் திருகோணமலை மாவட்டத்தில் வெருகல், சேருவில, மூதூர் பிரதேச செயலக பிரிவுகளில் சேதமடைந்த வீடுகளில் ஒரு தொகையானவை மீள் நிர்மாணத்திற்கான வழி பிறந்துள்ளது.

### கிழக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட வீடுகளும் தேவையும் அட்டவணை - V

| மாவட்டம் | அழிவடைந்த வீடுகள் மதிப்பீட்டு தொகை | திட்ட ஒதுக்கீடு | | | | வடக்கு கிழக்கு வீடமைப்பு திட்டத்தால் நிதி கிடைப்பவை |
|---|---|---|---|---|---|---|
| | | 1ம் திட்டம் | ஐரோப்பிய யூனியன் | திட்ட விஸ்தரிப்பு | தொகை | |
| திருகோணமலை | 46,673 | 4,873 | 571 | 2,039 | 7,483 | 16.03 |
| மட்டக்களப்பு | 74,823 | 7,651 | 1,100 | 3,255 | 12,006 | 16.04 |
| அம்பாறை | 11,356 | 3,798 | 404 | 175 | 4,377 | 38.54 |
| | 132,852 | 16,322 | 2,075 | 5,469 | 23,866 | 19 |

## திட்டத்திற்கான மேலதிக நிதி

அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க உலக வங்கி, திட்ட உதவியாக மேலதிகமாக 43 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன் வந்துள்ளது. இது தொடர்பாக திட்ட உத்தியோகத்தர் களுக்கிடையிலான கலந்துரையாடல் மார்ச் மாதம் 26ம் திகதிக்கும் ஏப்ரல் 02ம் திகதிக் குமிடையில் கொழும்பில் நடைபெற்றது.



உலகவங்கி பிரதிநிதிகளுக்கும் திட்ட உத்தியோகத்தர்களுக்குமிடையான

இறுதி கலந்துரையாடல் இலங்கை அரசாங்கத்திற்கும் உலக வங்கிக்கும் இடையே 23.04.2008இல் நடைபெறவு ள்ளது. இம் மேலதிக நிதியைக் கொண்டு 13,117 வீடுகள் 08 மாவட்டங்களிலும் மூன்று வருட காலங்களில் மீள்நிர்மாணம்

## தேச நிர்மாண அமைச்சர் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே அம்பாறையில் - திட்ட முன்னேற்றத்தை பார்வையிடல்



பயனாளியொருவருக்கு வீட்டுத்திட்ட இலச்சினை வழங்கியபோது

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம், தேச நிர்மாண அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டமாகும்.

பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக அபிவிருத்தி திட்டங்களை மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக தேச நிர்மாண அமைச்சர் கௌரவ சுசந்த புஞ்சி நிலமே அவர்கள், அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் விஜயம் செய்து பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளை மீளாய்வு செய்தார். அதன் அடிப்படையில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் பயனாளிகளோடும், கிராமிய மக்களோடும், திட்ட பிரதிப்பணிப்பாளரோடும் திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளையும், பணிப்புரைகளையும் வழங்கினார்.



பயனாளியொருவருக்கு வீட்டுத்திட்ட இலச்சினை வழங்கிவைத்த போது

## ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் திட்ட ஆய்வுக் குழுவும் திட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆய்வு செய்தல்



மங்களவிளக்கேற்றலின் போது

எமது திட்டத்திற்கு முதற் கட்டமாக 06 மில்லியன் யூரோக்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது. இந் நிதியிலிருந்து அம்பாறை மாவட்டத்தில் - கிராமங்களில் 2,391 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் மூலம் புனர் நிர்மாண வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

இத் திட்ட செயற்பாட்டின், செயல்திறமை, தொடர்புடமை, செயல்பாட்டுத் தன்மை, பயனாளிகளது பங்குபற்றல், திட்ட பயன்கள் நிலைத்து நிற்கும் தன்மை என்பனவற்றை ஆய்வு செய்வதற்காக இடைக்கால மீளாய்வுக் குழுவொன்று ஏப்ரல் மாதத்தில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்து வளாத்துப்பிட்டி என்ற கிராமத்தை ஆய்வு செய்தது. இக் கிராமத்தில் மூவின மக்களும் வாழ்வதோடு கடந்த கால யுத்தத்தால் பூரணமாகப் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட கிராமமான இங்கு இந் நிதியிலிருந்து 87 வீடுகள் மீள்நிர்மாணம் செய்யப்படுகின்றன.



வதிவிடப் பிரதிநிதியும் ஆய்வுக் குழுவினரும் திட்ட முன்னேற்றத்தை பார்வையிடல்

## உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம்


உலகவங்கி வதிவிடப்பிரதிநிதி மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டபோது

உலக வங்கியின் நிதி உதவியுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் நீதி நிர்வாக மறுசீரமைப்பு திட்டம், சுனாமி வீடமைப்பு திட்டம், மீளெழுச்சித் திட்டம் மற்றும் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி செல்வி நாகோஇ ஷி, 01.04.2008 யாழ்ப்பாணத்திற்கான ஒருநாள் கள விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.


உலகவங்கி வதிவிடப்பிரதிநிதி பயனாளிகளுடன் கலந்துரையாடியவேளை

அப்பொழுது இத் திட்டத்தின் 1ம் கட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட 72 வீடுகளைக் கொண்ட யாழ்ப்பாண பிரதேச செயலர்பிரிவில், நெடுங்குளம் கிராமத்திற்குச் சென்றபோது பயனாளிகளால் சிறப்பாக வரவேற்கப்பட்டார். அப்பொழுது அவருடன் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. க. கணேஷ், பிரதி திட்டப் பணிப்பாளர் திரு வே. சாம்பசிவம் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

## திட்ட நடைமுறையில் பொதுமக்கள் பங்களிப்பு – அதிகரிப்பு

நேர்ப் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தெரிவு, வீடுகளைப் புனர் நிர்மாணம் செய்தல் என்பன முழுமையாக அக் கிராமத்து மக்கள், மக்கள் அமைப்புக்கள் மற்றும் பயனாளிகளைக் கொண்டே செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பயனாளிகள் தெரிவு தொடர்பாக முறைப்பாடுகள் இதுவரை பிரதேச செயலரைக் கொண்டும், மாவட்ட ரீதியில் அரசாங்க அதிபரை முதன்மையாகக் கொண்டுமே விசாரணைகளும் தீர்வுகளும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. ஆனால் பிரதேச செயலர் மட்ட முறைப்பாடுகள் பரிசீலனை செய்து அவற்றிற்கு பிரதேச செயலருக்கு பரிந்துரை செய்வதற்காக மக்கள்சார் நிறுவனங்கள் பல சமய தலைவர்கள் போன்றோரைக் கொண்ட குழுவை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலாக, முறைப்பாடுகள் கிராம, பயனாளிகள் தொடர்பு என்பவற்றிற்கு மட்டுப்படுத்தாது, திட்டம் தொடர்பான சகல முறைப்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு அவை தொடர்பாக நடவடிக்கையெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், திட்டத்தில் ஒப்புரவு, வெளிப்படைத் தன்மை, நல்லாட்சி திட்டத்தின் நன்மைகள் நிலைத்து நிற்கும் தன்மை என்பவற்றை தொடர்ச்சியாகப் பேண முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## நேர்ப் திட்டத்தின் மூலம் கிழக்கு மாகாணத் திற்கான முதலீடு ரூபா 5,013 மில்லியன்

2004ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நேர்ப் திட்டத்தின் கீழ் உலக வங்கி ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசாங்க நிதியின் மூ லம் மொத்தமாக கிழக்கு மாகாணத்திற்கு செலவிடப்படும் தொகை ரூபா 5,092.54 மில்லியன் ஆகும். அவை மூன்று மாவட்டங்களுக்கும் பின்வருமாறு பகிரப்பட்டுள்ளது.

| மாவட்டம் | மொத்த வீடுகள் | பயனாளிக்கான உதவித் தொகை | நிர்வாக செலவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | | |
| திருகோணமலை | 4,873 | 1,361.25 | 95.28 | 1,456.53 |
| மட்டக்களப்பு | 7,802 | 2,264.175 | 158.49 | 2,422.665 |
| அம்பாறை | 3,798 | 1,133.975 | 79.37 | 1,213.345 |
| **மொத்தம்** | **16,473** | **4,759.4** | **333.14** | **5,092.54** |

## மக்கள் உதவி வழங்கும் சேவையில் நேர்ப் - பங்களிப்பு

2008 மார்ச் 29ம் - 30ம் திகதிகளில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் உதவி வழங்கும் சேவையில் பங்குபற்ற "நேர்ப்"க்கும் மாவட்ட அரசாங்க அதிபர் அழைப்பு விட்டிருந்தார். அதன்படி, நேர்ப் உத்தியோகத்தர்கள் திட்டச் செயற்பாட்டை விளக்குவதற்காக பாரிய காட்சியறையைத் தயார் செய்திருந்தனர்.

இக் காட்சி கூடத்திற்கு கௌரவ அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே அவர்கள், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. D. திசநாயக்க, மாவட்ட அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள் என பல தரப்பட்ட உத்தியோகத்தர்கள் வருகை தந்து, அங்கு தொடர்ச்சியாக வந்த முறைப்பாடுகளை, கோரிக்கைகளை தெரிவித்த ஏறக்குறைய 1,700 பொதுமக்களுடன் கலந்துரையாடியதோடு, பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளையும் வழங்கி எமது திட்டத்தை கௌரவப்படுத்தினர்.

வீடுகள் முடிவடைந்த சில பயனாளிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் – ரியல் அட்மிரல் மொகான் ஜெயவிக்கிரம, பொது நிர்வாக அமைச்சர் கௌரவ கரு ஜெயசூரியா அவர்கள், அமைச்சின் செயலாளர், அரசாங்க அதிபர் ஆகியோர் வீட்டுத் திறப்புக்களைக் கையளித்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் அனர்த்த நிவாரண அமைச்சர் கௌரவ அமீர் அலி அவர்கள் எமது காட்சிக் கூடத்திற்கு சமூகம் கொடுத்து, சமூக மளித்த மக்களையும் எமது திட்ட பணியாளர்களையும் சந்தித்து ஊக்கப்படுத்தினார். 3,341 மக்கள் இக் கூடத்தை தரிசித்ததோடு 2,014 பயனாளிகள் தமக்கான கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொண்டனர்.


பொதுமக்களுக்கு திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்படுகின்றது

# இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி நடவடிக்கையில் வெற்றிகண்டுள்ள நேர்ப் (NEHRP)

இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்குவதன் மூலம் அவர்களது வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்க முடிவதுடன் அவர்கள் மூலமாக கிராமப்புற பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தலாம் என்ற எண்ணத்தில் அரசாங்கமும் பல அரச சார்பற்ற நிறுவனங்களும் முயன்று வருகின்றன. ஆனால் கிராமிய குறிப்பாக யுத்தத்தால் பாதிப்படைந்த, நலிவடைந்த குடும்பங்களிடையே இம் முயற்சி எந்தளவு தூரம் சென்றுள்ளது என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். ஆனால், வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தைப் பொறுத்தவரை கடந்த இரு வருட செயற்பாடு அதில் பெற்ற அனுபவம் என்பன வெற்றியானதாக திருப்தியைத் தருகின்றது.



களப் பயிற்சியில் ஈடுபடும் இளைஞர்கள்

திட்ட முன்மொழிவின்படி 1,200 இளைஞர்களுக்கு திட்ட காலத்தில் 800 பேருக்கு மேசன் பயிற்சியும் 400 பேருக்கு தச்சுத் தொழில் பயிற்சியும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் இதனை செயற்படுத்துவதற்கு முன்னோடியாக பல ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, UNDP உதவியுடன் கட்டிட ஒப்பந்தக்காரர் மூலம் முதலாவது பயிற்சி நடாத்தப்பட்டு பயிற்சி பெற்றவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்பட்டது. ஆனால் பயிற்சி பெற்றவர்கள் எவரும் இத் திட்டத்திற்காக எவ்விதப் பங்களிப்பும் செய்யவில்லை. பலர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்று சென்று விட்டனர்.

நேர்ப், தனது தேவையையும், நடைபெற்று வரும் பயிற்சித் திட்டங்களது தோல்விக்கான காரணிகளையும் ஆராய்ந்து பயிற்சி திட்ட நடைமுறையையும் செயற்படுத்தலையும் திட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொண்டது. அவையாவன:

- மற்றைய பயிற்சி திட்டங்கள், நகரத்தை மையமாக கொண்ட தொழில்நுட்ப கல்லூரிகளிலும், V.T.C பயிற்சி நிலையங்களுக்கிடையேயும் செய்யப்பட்டன. ஆனால், நேர்ப் திட்டம் - இத் திட்டத்தின் கீழ் வீடுகளை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட பின் தங்கிய கிராமங்களை தமது பயிற்சி நிலையங்களாக்கிக் கொண்டது.
- பயிற்சியாளர்களது கல்வியறிவை முக்கிய காரணியாகக் கொள்ளாது. எழுத, வாசிக்கத் தெரிந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். முக்கியமாக திட்டப் பயனாளிகளது குடும்பத்திலிருந்து பயனாளிகள் இனம் காணப்பட்டனர்.
- பயனாளிகளை ஊக்குவிப்பதற்காக அவர்களின் நாளாந்த கூலி வேலை மூலம் கிடைக்கும் ஊதியத்தின் 50%, ரூபா 350.00 – 400.00 பயிற்சிப் படிக் கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது.
- பயிற்சிக் காலம் 3 – 4 மாதங்களாக வரையறுக்கப்பட்டு, குறுகியகால வகுப்பறைப் பயிற்சியின் பின்னர் அவர்கள் மீதிக் காலத்தில் பிரயோகப் பயிற்சிக்காக தொழில்சார் தொழிலாளர்களுடன் இணைக்கப்படுகின்றனர். அப்பொழுதும் அவர்களுக்கு மேலதிக மறைமுக வருமானமும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையும் கிடைக்கின்றது.
- பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களைக் கொண்டே சில நலிவடைந்த பயனாளிகளது வீடுகளை கட்டுதல், பூசுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது அவர்களுக்கு நம்பிக்கையைத் தருவதுடன், பயனாளிகளுக்கும் நன்மை கிடைக்கின்றது.



பயிற்சி வகுப்பில் இளைஞர்கள்

அத்துடன் எமது திட்டத்தில் தொழிற்பயிற்சி பெற்ற பலர் இப்பொழுது தாமாகவே கட்டிடத் தொழிலை செய்வதுடன் நாளொன்றுக்கு ரூபா 800.00 – 1,200 வரையிலான வருமானத்தைப் பெறுவதையும் காணலாம்.

இந் நடவடிக்கை மூலம் இப் பயிற்சியைப் பெறுவதற்கு கிராமிய மக்களிடையே பெரிய போட்டி ஏற்பட்டுள்ளது.

இத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு 1,200 பேருக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்ட பொழுதும் 1,313 இளைஞர்கள் பயிற்றப்பட்டுள்ளனர். மேலதிகமாக 500 இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்காக நிதியுதவி விரைவில் திட்டத்திற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பயனாளியின் தாயாரின் இதயத்திலிருந்து



**கௌரீஸ்வரி,**
**கோவிலடி**
**திருகோணமலை**

படித்துவிட்டு வேலையற்று திண்டாடித் திரிந்த என்னுடைய மகனை மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாது யோசித்துக் கொண்டிருந்தோம்.

வடக்கு கிழக்கு வீடமைப்புத் திட்டத்தின் பயனாளியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நான் என்னுடைய வீட்டை என்னுடைய குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டே வீட்டு வேலைகளை மேற்கொண்டு வந்தோம். ஆயினும் திறன் வாய்ந்த தொழிலாளருக்காக அன்றாடம் 1,000.00 முதல் 1,500.00 வரை செலுத்த வேண்டியதாயிற்று.

இந் நிலையிலே எங்கள் பகுதியிலும் தொழிற்திறன் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டதனால் என்னுடைய மகனையும் அதிலே சேர்த்து தொழில் பழக்கியதால் என்னுடைய வீட்டை எனது மகனைக் கொண்டே வடிவமைக்க கூடியதாகவுள்ளது. பெருந்தொகைப் பணத்தை செலவழித்து மேசன் பின்னால் அலைந்து திரிந்து ஏமாற்றமடைந்த என்னைப் போன்ற பயனாளிக்கு வேலைகளைப் பூரணப்படுத்த எங்கள் பகுதி இளைஞர்களே இன்று பெரிதும் கைகொடுக்கிறார்கள்.

# பயனாளியின் இதயத்திலிருந்து

## புத்தளத்திலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பத்தின் உள்ளத்திலிருந்து



**முகமட் றிஸ்வான்**
**உப்புக்குளம் தெற்கு**
**மன்னார்**

1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஏற்பட்ட நாட்டின் சீரற்ற சூழ்நிலை காரணமாக நாங்கள் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து கடல் மார்க்கமாக கற்பிட்டிக்குச் சென்று அங்கு அகதிகளாகப் பதிவு செய்து குறிஞ்சிப்பிட்டி முகாமில் தங்கவைக்கப்பட்டு 13 வருடங்களின் அகதி வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு 2003இல் உப்புக்குளம் கிராமத்தில் மீளக் குடியமர்ந்தோம்.

எனது குடும்பத்தை ஒரு சிறுகுடிசையிலேயே வைத்து வாழ்க்கை நடாத்தி வந்தோம் எமது வருங்காலம் எப்படி அமையப் போகிறது? எப்படி நல்ல ஒரு வீடு கட்டிக் கொண்டு குடும்பத்தை கௌரவமாக, பாதுகாப்பாக வைப்பது என்ற அங்கலாய்ப்பில் ஏக்கத்தில் வாழ்ந்து வந்தோம்.

இந் நிலையில் தான் 2007ம் ஆண்டு தொடக்கத்தில் உலக வங்கி நிதியுடன் இயங்கி வரும் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் துண்டுப் பிரசுரம் கிடைக்கப்பெற்றது. அதில் எனது கிராமமும் வீட்டுத் திட்ட மீள் நிர்மாணப் பணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

பின்பு சில நாட்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்கள் பொது இடங்களில் ஒட்டப்பட்டிருந்தது. அத்துடன் இது பற்றிய முறையீடுகள் சம்பந்தமாகவும் தெரிவிக்கும்படி குறிப்பிடப்படடிருந்தது. பயனாளிகளின் பெயர் பட்டியலில் எனது பெயரைக் கண்டதும் மிகவும் சந்தோசத்துடன் வீடு சென்று எனது மனைவி, பிள்ளைகளுக்கு கூறிச் சந்தோசமடைந்தோம்.

இதேவேளையில் எனது கூலி வேலையை விட்டு, வீட்டு வேலையில் ஈடுபடுவதால் எனது அன்றாட சாப்பாட்டுக்கான நிலை மிகவும் கஷ்டமாகி விட்டாலும் உலக உணவு ஸ்தாபனம் (WFP) 96 நாட்களுக்குரிய வேலைக்கான உலர் உணவு தந்துதவியதால் ஊக்கத்துடன் அன்றாட வேலைகளைச் செய்து வீட்டினை எங்கள் விருப்பத்திற்கேற்றவாறு கட்டுவதற்கு பல வழிகளிலும் உதவிய நேர்ப் நிறுவனம் வீட்டின் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு செய்வதற்காக சில மரக் கன்றுகளை தந்து எமது வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு உதவியுள்ளது.

## பருவான்கரையில் மீளக் குடியமர்ந்த குடும்பம்



**பாலிப்போடி சுப்பிரமணியம்**
**கற்சேனை**
**மண்முனை தென்மேற்கு**
**மட்டக்களப்பு**

நான் தோட்டப் பயிர்ச் செய்கை மீன்பிடி மற்றும் கூலித் தொழிலாளியாக வேலை செய்த போதும் என்னால் எனது வருமானத்தை அதிகரிக்கச் செய்ய முடியவில்லை. இந் நிலையில் யுத்த இடம்பெயர்வினால் நானும் எனது குடும்பமும் மேலும் வறுமையான நிலைக்கு தள்ளப்பட்டோம். 1990ம் ஆண்டு இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக எனது வீடு எரிக்கப்பட்டதுடன் பொருட்களும் சூறையாடப்பட்டது. வீட்டு வளவினுள் இருந்த பெறுமதியான மரங்களும், தென்னை மரங்களும் தறிக்கப்பட்டு அகற்றப்பட்டிருந்தன.

இடம்பெயர்வை தொடர்ந்து மீண்டும் குடியமர்த்தப்பட்டபோது வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாத மனோநிலையில் அனைத்தையும் இழந்த உணர்வோடு தினமும் வறுமைக்கு முகம் கொடுத்தே வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

தொடர்ந்து மீண்டும் மீண்டும் இடம்பெயர்வு ஏற்பட்டதனால் எரிக்கப்பட்ட எனது வீட்டினை முழுமையாக திருத்தியமைக்கவோ அல்லது பாதுகாப்பான வசிப்பிடத்தை ஏற்படுத்திக் கொள்ளவோ முடியாத நிலையில் தற்காலிக வீட்டில் 05பிள்ளைகளுடன் வாழந்து வந்தேன். எனது பாதிக்கப்பட்ட வீட்டின் நிலையினை கருத்தில் கொண்டு எனது வீட்டையும் மீள் நிர்மாணம் செய்ய உதவி செய்தமைக்கு உலக வங்கியினருக்கும் நேர்ப் திட்டத்தினருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

## விதவை குடும்பத் தலைவியின் வெளிப்பாடு



**S.De.சில்வா**
**தெய்வானைப்பிள்ளை,**
**அன்புவழிபுரம்**

அன்றாடம் உழைத்து ஜீவனோபாயம் நடாத்துகின்ற எங்களைப் போன்ற ஏழைகளால் மூன்று வேளையும் நிம்மதியாக சாப்பாடு தேடுவதே பெரிய சிக்கல். அதற்கு மத்தியிலும் பிள்ளைகளைப் படிப்பித்தாக வேண்டும். இவ்வாறான வாழ்க்கைப் பயணத்தில் நிரந்தரமான வீடொன்றை அமைத்து வாழ்வது என்பது கனவில் கூட காண்பதற்கு ஆசையாகத் தானிருக்கும்.

மலை சார்ந்த பகுதியில் வசித்து வருகின்றோம். என்னுடைய வீட்டிற்கு கட்டுமாணப் பொருட்களை கொண்டு செல்வதோ மிகவும் கடினமான விடயம். ஆதலால் எங்கள் வீட்டிற்கான பொருட்களை என் பிள்ளைகள் சகிதமாய் ஒவ்வொரு கல்லாகவே கொண்டு சேர்த்தோம்.

உண்மையில் இது எமக்கு கடவுள் தந்த கொடையாகவே கருதுகிறேன். சகோதர இனத்தைச் சேர்ந்தவரான என் கணவரை இழந்து விதவையான நான் இவ்வாறு ஒரு வீட்டை இன்றல்ல என்றுமே கட்டியிருக்க முடியாது. ஆனாலும் உலக வங்கியினூடாக NEHRP உத்தியோகத்தர்கள் தந்த ஊக்கத்தினாலும் எங்கள் சம்பிரதாய முறைமைகளுக்கமைவாக எங்கள் குடும்ப தேவையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சந்தோசமாக வாழ்க்கை நடாத்த தயாராகி விட்டோம். இனிவரும் காலத்தில் நிரந்தர வீடிருப்பதனால் பிள்ளைகள் கல்வி கற்க நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு அகதி வாழ்வும் அற்றுப் போயுள்ளது.

வடக்கு கிழக்கிலே வாழ்கின்ற என்னைப் போன்ற ஏழைகளுக்கு முழுமையாக இந்தத் திட்டம் சென்றடைய வேண்டுமென்பதே என்னுடைய அவாவாகவுள்ளது.

## பார்வையிழந்த பயனாளியின் பார்வையில்



**தீ பி. எச். மைத்திரிபால**
**உஹண**
**அம்பாறை**

நான் உஹண பிரதேச செயலகப் பிரிவில் நுகெலந்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்றேன். எனக்கு பிறவியில் கண் தெரியாது. மனைவிக்கும் இப்போது சில வருடங்களாக கண் தெரியாது. 1990ம் ஆண்டு ஏற்பட்ட யுத்த காலத்தில் எங்களது வீடுகளை விட்டு ஓடி உறவினர் வீடுகளில் பல துயரங்களோடு வாழ்ந்தோம். பின்னர் 2002ம் ஆண்டு எனது கண் தெரியாத மகன் உட்பட 3 பிள்ளைகளுடன் மீண்டும் வந்தோம். உடமைகள் சூறையாடப்பட்டிருந்தன. வாழ்ந்த வீடு அழிக்கப்பட்டிருந்தது. ஒரு குடிசையை அமைத்து, வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் 05 வருடங்களாக வாழ்ந்து கொண்டிருந்தேன்.

அப்போது தான் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக உதவும் நேர்ப் திட்டம் வந்தது. என்னையும் பயனாளியாக தெரிவு செய்தது. இப்போது வீடு கட்டிக் கொண்டிருக்கின்றேன். எனது பிள்ளைகள் வீட்டில் வேலை செய்து வருகிறார்கள். இவ்வேளையில் உங்களிடம் ஒன்றைத் தெரிவிக்க வேண்டும். எனக்கு நேர்ப் திட்டம் வருவதற்கு முன் உதவி செய்யாத பலர் தற்போது உதவுகிறார்கள் மட்டுமல்ல எங்களோடும் பலர் இப்போது அன்பு காட்டுகிறார்கள். எனது பிள்ளைகளின் கல்விக்காக விரைவாக இவ் வீட்டைக் கட்டி முடிக்க திடமாய் உள்ளேன். இறுதியாக, எனது எதிர்காலத்தை ஒளிமயமாக்கிய நேர்ப் திட்டத்திற்கு என் உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

## எமது வாழ்வில் ஒளியேற்றிய நேர்ப் திட்டம்



**வே. முருகமூர்த்தி,**
**ஈச்சங்குளம்,**
**வவுனியா.**

நாங்கள் 1992 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக ஈச்சங்குளம் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து தவசியாகுளத்தில் வாழ்ந்த காலப்பகுதியில் வசிப்பதற்கு வீடு இன்றி மழை, வெள்ளம், குளிர், வெப்பம் என்பவற்றால் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தோம். மீண்டும் 2004 ஆம் ஆண்டு எமது கிராமத்தில் மீளக்குடியமர்ந்து தற்காலிக குடிசை அமைத்து எமது 05 பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தோம் எமது பிரதான தொழில் விவசாயமாகும். எமது பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்கூடம் செல்லும் பராயத்தினர். இதனால் எமக்கு நிரந்தர வீடு அமைப்பதென்பது இயலாத ஒரு காரியமாகவே இருந்து வந்தது. இக்காலப்பகுதியில்தான் எமக்கு நேர்ப் திட்டத்தின் மூலம் எமது பங்களிப்புடன் வீட்டினைக் கட்டிமுடிப்பதற்கான நிதியுதவியாக ரூபா 325,000.00 வழங்கப்பட்டது நாம் இந்நிதியினை சிறந்தமுறையில் பயன்படுத்தி எமது முழு முயற்சியுடன் இவ்வாறானதொரு வீட்டினை கட்டிமுடித்துள்ளோம்.

இவ்வீட்டின் மூலம் குப்பி விளக்கிலும் மழை ஒழுக்கிலும் கல்வி கற்பதற்கு வசதியற்றிருந்த எமது பிள்ளைகள் நிம்மதியாக பாதுகாப்பாக கல்வி கற்பதற்கும் அவர்களின் சுகாதாரப் பழக்கவழக்கங்களை பேணுவதற்கும் அரியதொரு வாய்ப்பாக இவ்வீட்டுத்திட்டம் அமைந்துள்ளது. மேலும் இவ்வீட்டின் மூலம் எமது சமூக அந்தஸ்து உயர்வடைந்துள்ளதை எம்மால் உணரக் கூடியதாகவுள்ளது. மற்றும் இது போன்ற உதவிகளை எம்மைப் போன்று யுத்தத்தின் கொடூரத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளையும் தமது உடைமைகளையும் உறவுகளையும் இழந்து குடிசைகளில் மழையிலும், வெள்ளத்திலும் விச ஜந்துகளின் அச்சுறுத்தல்களால் தவித்த எம் போன்ற மக்களிற்கு இத்தகைய பெரிய உதவியை வழங்கி ஏழைகளாகிய எமது வாழ்வில் ஒளியேற்றிய உலக வங்கியினருக்கும் வடக்குக் கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தினருக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாகவிருப்போம்.

## எமக்குக் கிடைத்த பெரும் கொடை



**அப்பையா செல்வம்**
**தேரிட்டி**
**தெல்லிப்பளை**
**யாழ்ப்பாணம்**

தெல்லிப்பழை தேரிட்டி கிராமத்தைச் சேர்ந்த அப்பையா செல்வம் ஆகிய எனக்கு ஆறு குழந்தைகள் நாங்கள் 8 அங்கத்தவர் கொண்ட குடும்பம் கடந்த 1992லும் 1995லும் இடம் பெயர்ந்த பின்னர் 2000ம் ஆண்டில் மீள எமது வீடுக்கு வந்து பார்த்த போது எமது வீடு தரைமட்டமாக சேதமாக்கப்பட்ட நிலையிலிருந்தது பின்னர் நாம் சிறிய குடிசை அமைத்து வாழ்ந்தோம்.

உலக வங்கி வீடமைப்பு திட்டத்தின் கீழ் எமது கிராமம் தெரிவு செய்யப்பட்டமையை அறிந்து பிரதேச செயலாளர் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு படிவம் பூர்த்தியாக்கி இத்திட்டத்தில் பயனாளியானேன். உலக வங்கியின் 250,000 ரூபா உதவித் தொகையும் நானும் எனது குடும்ப உறுப்பினர் அனைவரதும் உழைப்பினால் வீட்டினைப் பூர்த்தியாக்கினேன்.

நான் மேசன் தொழிலாளியாகவும், மகன் தச்சுத் தொழிலாளியாகவும் இருந்தமையாலும் எமது உடைந்த வீட்டினுடைய கூரைத் தகடு, கூரை மரங்கள் ஆகியவற்றையும் பாவித்து பூர்த்தியாக்கியுள்ளேன். உலக வங்கி நிதியுதவியிலான வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தில் நான் இவ்வாறான வீட்டினை நிர்மாணிக்க முடிந்தது. அதனால் நானும் எனது பிள்ளைகளும் மனமகிழ்ச்சியுடனும் ஊக்கத்துடனும் காணப்படுகிறோம். இவ்வாறான ஓர் வீட்டுத் திட்டத்தினை தந்து எமது வாழ்வில் ஒளி வீசவைத்த உலக வங்கியினருக்கு நான் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

## மீள்நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகள் சில

**வவுனியா**



**திருகோணமலை**



**மன்னார்**



**யாழ்ப்பாணம்**




**அம்பாறை**




**மட்டக்களப்பு**



## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் செயற்பாடு தொடர்பான மாவட்டரீதியாக செலவு (31.03.2008) ஓர் ஒப்பீட்டு பார்வை




## வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டத்தின் பௌதீக இலக்கும் – முன்னேற்றமும்





**வெளியீடு : வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்டம்**
**மாகாண செயலகம்**
68/4 A, மக்கெய்சர் அப்றோச் வீதி, உவர்மலை, திருகோணமலை

தொலைபேசி : 026- 2227536
தொலைநகல் : 026 -2220031
மின்அஞ்சல் : pdnehrp@sltnet.lk